சூழ்நிலை இருக்கிறது. ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் பண்டிகை தினங்களில் குறிப்பாக ரம்சான், பக்ரித் போன்ற பண்டிகை தினங்களில் குவைத், துபாய் போன்ற நாடுகளுக்கு ஆடுகளை அதிகமாக ஏற்றுமதி செய்கிறார்கள். அதே போன்று தமிழ்நாட்டிலும் இனப்பெருக்கத்தை செய்து— ஆடுகள் இனப்பெருக்கத்தை செய்து—அதிகமான அளவிற்கு மேலை நாடுகளுக்கு ஆடுகளை ஏற்றுமதி செய்யும் எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் மூலமாக ஆடுகள் வளர்க்கின்ற பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையிலேதான் இந்த ஆண்டிலே கூட ஐரோப்பிய பொருளாதார நிதியுதவி திட்டத்தின் கீழ் 6 மாவட்டங்களிலே செயல்படுகின்ற ஒரு திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை மருத்துவமனை.

5533—திரு. சி. கோவிந்தராஜன்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

நெல்லிக்குப்பம் நகரத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

9-50 மணி

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் நகரம் கிட்டத்தட்ட 50 ஆயிரம் பேர் கொண்ட ஒரு முனிசிபல் நகரம். அங்கே கால்நடைகள் ஏராளமாக இருக்கின்றன. கால்நடைகளுக்கு வைத்தியம் செய்வதற்கு அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிற காரணத்தால் அரசு மறு பரிசீலனைச் செய்து அங்கே ஒரு கால்நடை மருத்துவமனையை ஏற்படுத்த ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

1990 மே, 7]

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் நகரத்திற்கு கிழக்கே 2 கிலோ மீட்டர் தூரத்தில் காராமணிக்குப்பம் என்னும் இடத்தில் ஒரு கால் நடை மருந்தகம் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. 5 கிலோ மீட்டர் தூரம் மேற்கில் மேல்பட்டம் பாக்கம் என்ற ஊரில் ஒரு கால்நடை மருந்தகம் செயல்பட்டு கொண்டு வருகிறது. ஏற்கெனவே இது நெல்லிக்குப்பம் நகரத்திற்கு ஏற்படுத்தப்பட்ட மருந்தகம் ஆகத்தான் இருக்கும் என கருதுகிறேன். ஏன் என்றால் கால்நடை மருந்தகங்கள் எல்லாமே ஊரிலிருந்து நீண்ட தூரத்தில், இடம் கிடைக்காத காரணத்தால் ஊருக்கு அப்பால் ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அமைந்து இருக்கும் என்றே நான் கருதுகிறேன். மேலும் ஊரிலுள்ள ஜனத்தொகை பற்றிச் சொன்னார்கள். கால்நடைகளின் எண்ணிக்கையை ஆய்வு செய்து அது குறித்து இந்த அரசு, அரசினுடைய நிதி நிலைமைக்கு ஏற்ப மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை ஆய்வு செய்து பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பத்தில் இருக்கக்கூடிய சர்க்கரை ஆலைக்கு லாரிகளில் மட்டும் அல்ல, மாட்டு வண்டிகளில், டயர் வண்டிகளில் கரும்பை அனுப்ப வேண்டிய சூழ்நிலையின் காரணமாக ஏராளமான பேர்கள் மாடுகளை அங்கே வைத்து இருக்கிறார்கள். 2 கிலோ மீட்டர் தூரமோ அல்லது 5 கிலோ மீட்டர் தூரமோ போக முடியாத சூழ்நிலை இருக்கிறது. இப்போது அங்கே மருந்தகம் கூட இல்லை. எனவே அங்கே ஒரு மருத்துவமனை உடனடியாகத் தேவைப்படுகிறது. அதை அரசு பரிசீலனை செய்து அங்கே உடனடியாக அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் நான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை ஆய்வு செய்து அரசினுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப அது பரிசீலனைச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு .— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS